## 118. கல்லறை முட முடியாதே

### பல்லவி

கல்லறை முட முடியாதே
பாதாளம் தடுத்திட முடியாதே

### அனுபல்லவி

மரணத்தை வென்றவரே
பாதாளம் ஜெயித்தவரே
போற்றுவோம் உம்மை வாழ்த்துவோம்
துதி கனம் எல்லாம் உம் பாதத்தில்

### சரணங்கள்

1. யூத ராஜசிங்கம் வெற்றி சிறந்தாரே
   ஈசாயின் வேரிலிருந்து செழித்து வளர்ந்தாரே
   - மரணத்தை

2. பூமியின் அதிகாரங்கள் அவர் முன் நிற்காதே
   அரசின் முத்திரைகள் சிதறி போகுமே
   - மரணத்தை

3. எல்லா நாமத்திற்கும் மேலான இயேசுவின் நாமம்
   எல்லா வல்லமைக்கும் உயர்ந்து நிற்கும் நாமம்
   - மரணத்தை